வொரு பத்திரத்தையும் பதிவு செய்வதற்குக் கணிசமான கால அளவும் உழைப்பும் தேவைப்படுவதால் இக்கால அளவில் பதிவு செய்யப்படுவதற்காகக் கொண்டுவரப்படும் பத்திரங்கள் அனைத்தையும் அந்தந்த நாளிலேயே பதிவு செய்ய முடியவில்லை. பதிவுத் துறைத் தலைவர் இப்பொழுது அந்த அலுவலகத்திலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கையை உயர்த்தக் கோரியிருக்கிறார். இக்கோரிக்கை தனியே பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, சாத்தூர் நகரத்திலே உள்ள சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபிசில் நீண்ட நாட்களாகவே இந்த தொல்லையிருக்கிறது. சென்ற ஆண்டு நானே என்னுடைய நிலத்தை விற்கப் போயிருந்தபோது, இரண்டு நாட்கள் தங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போதிருந்த அமைச்சர் அவர்களிடம் இதைப் பற்றி கூறி ஏழாயிரம் பண்ணையில் ஒரு சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபிஸ் வைக்கவேண்டுமென்று கூறியிருந்தேன். அது கவனிக்கப்படவில்லை. இந்த அரசாங்கம் 7 அல்லது 10 மைல் அளவிற்கு ஒரு சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபிஸ் வைக்க ஏற்பாடு செய்வார்களா ? குறிப்பாக சாத்தூர், ஏழாயிரம் பண்ணையில் வைக்க ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சாத்தூரைப் பொறுத்தவரையில், இது ஒரு சில மாதங்களுக்கு இருந்து வரும் தொல்லையாகும். அதைத் தவிர்க்க கொஞ்சம் கூடுதலாக ஆட்களை போட Inspecter-General of Registration கேட்டிருக்கிறார். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. புதிதாக எத்தனை அலுவலகங்கள் அமைக்க அனுமதி கொடுக்கப்படுவது என்பது மாவட்ட ரீதியாக இப்போது தேர்ந்தெடுக்கப்படுகிறது. அந்த இடங்களில் ராமனாதபுரத்திற்கு இந்த ஆண்டு இடம் இல்லை.

Munsif Court, Thirumangalam.

* 203.*Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(*a*) the number of places inspected for housing the Munsif Court of Thirumangalam, Madurai District ; and

(*b*) the place chosen finally and by whom ?

திருமங்கலம் முனிசீப் கோர்ட்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு சட்ட-கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்ட திருமங்கலம் முனிசீப் கோர்ட்டுக்கு இதுவரை எத்தனை இடம் பார்க்கப்பட்டது ?

(இ) யாரால் எந்த இடம் கடைசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது ?

THE HON. THIRU S. MADHAVAN : (*a*) Five sites.

(*b*) Though the Government have issued orders for acquiring S. No. 31 of Thirumangalam village, the question of acquiring olternate site in S. No. 24 of the village near the Sub-Registrar's office is now under consideration of the Government.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, முன்சீப் கோர்ட் சம்பந்தமாக கிட்டதட்ட 5, 6 ஆண்டுகளாக பிரோரணை இருந்து கொண்டு வருகிறது. இடத்தைப்பற்றிய பிரச்னை இல்லை. வேலை எப்போது ஆரம்பிக்கப்படும் ? துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

7th March 1968]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கேள்வி இடத்தைப் பற்றியிருந்த தால் பதிலும் இடத்தைப் பற்றியிருக்கிறது. ஏற்கெனவே ஒரு இடத்தை எடுத்து இருந்தோம். வழக்கறிஞர்கள் சங்கமும், பொது மக்களும் அது வேண்டாமென்றும் வேறு இடத்தை தேர்ந்தெடுக்கவேண்டுமென்றும் கேட்டிருந்தார்கள். அதன்படி இப்போது வேறு இடம் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது. அதற்கு ஒப்புதல் கேட்டு உயர்நீதி மன்றத்திற்கு எழுதப் பட்டிருக்கிறது.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, இப்போது சட்ட-கூட்டுறவு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட இடம் மிகவும் பொருத்தமான இடம் என்று எல்லோராலும் வரவேற்கப்பட்டது. இந்த இடத்தில் கட்டிடம் சீக்கிரமாக அமைக்க வேண்டும். ஏனென்றால் தற்போதைய முன்சீப் கோர்ட் கட்டிடத்தை ஆஸ்பத்திரியை விஸ்தரிப்பதற்காக கொடுக்கவேண்டு மென்று கேட்கப்படுகிறது. அதை முன்னிட்டு சீக்கிரத்தில் இந்த கட்டி டத்தை கட்ட அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மருத்துவ விடுதிக்கு தேவை என்பதை அரசாங்கம் ஒப்புக் கொள்கிறது. ஆகவே உயர்நீதி மன்றத் திற்கு எழுதி ஒப்புதல் பெற்ற பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

Rice Mills.

*** 204. *Q.*—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—**

(*a*) the stage at which the erection of 8 large Modern Rice Mills in Tamilnad now stands;

(*b*) when they will start functioning;

(*c*) the estimated expenditure; and

(*d*) the number of bags of paddy per day that can be hulled in each of the said new mills?

அரிசி ஆலைகள்.

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு சட்ட-கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் 8 பெரிய நவீன அரிசி ஆலைகள் நிர்மாணிக்க இருந்த செயற்குறிப்பு எந்நிலையில் உள்ளது?

(இ) எப்பொழுது இந்த ஆலைகள் இயங்கும்?

(உ) எவ்வளவு பணம் செலவாகும்?

(எ) எத்தனை மூட்டை நெல் மேற்படி புது மில்களில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மில்லில் அறைக்கலாம்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) கூட்டுறவுத் துறையில் 13 நவீன அரிசி ஆலைகள் விரைவில் ஏற்படுத்தப்படும்.

(இ) 1968–69-ம் ஆண்டில் இந்த ஆலைகள் நிறுவப்படலாம்.

(உ) சுமார் ரூ. 111 லட்சம் செலவாகுமென மதிப்பிடப்படுகிறது.

(எ) ஒவ்வொரு ஆலையும் ஒரு மணியில் 2 டன் நெல் அறைக்கும் சக்தியுள்ளதாயிருக்கும்.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவரவர்களே, இந்த ஆலைகள் அமைப்பதற்கு மத்திய சர்க்கார் எவ்வளவு பணம் கொடுத்தது? எங் கெங்கு அமைக்கயிருக்கிறார்கள்? ஜில்லா வாரியாக அமைக்கப்படுமா?